செய்தி வெளியீடு எண்.28-2016 நாள்: 16.07.2016

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி விஏஎஸ் திருமண மண்டபத்தில் வருவாய்த்துறையின் மூலம் 1,652 பயனாளிகளுக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 6வது முறையாக பதிவியேற்றவுடன் சிறு குறு விவசாயிகளின் கடன் தொகையான ரூ.5,780 கோடியினை ரத்து செய்துள்ளார்கள்.

******

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி விஏஎஸ் திருமண மண்டபத்தில் வருவாய்த்துறையின் மூலம் 1,652 பயனாளிகளுக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் வழங்கினார்.

இவ்விழாவில் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள், கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை, சங்கராபுரம், சின்னசேலம் ஆகிய வட்டங்களைச் சேர்ந்த, 13 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டா ஒப்படைகள், 749 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல், 75 பயனாளிகளுக்கு பட்டா மாற்றம் உட்பிரிவு, 59 பயனாளிகளுக்கு குடும்ப அட்டை, 373 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 357 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், 5 பயனாளிகளுக்கு நலிந்தோர் நலத்திட்ட உதவிகள், 2 பயனாளிகளுக்கு இயற்கை இடர்பாடுகள் நிவாரணம், 3 பயனாளிகளுக்கு ஆதரவற்ற விதவை சான்றிதழ், 2 பயனாளிகளுக்கு விபத்து நிவாரண உதவித்தொகை, 1 பயனாளிக்கு கடல்கடந்த இந்தியர் இறப்பு நிவாரண உதவித்தொகை, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 13 பயனாளிகளுக்கு விபத்து நிவாரண உதவித்தொகை என மொத்தம் 1,652 பயனாளிகளுக்கு ரூ.1,01,05,953/- நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் 2011 சட்டமன்ற பொதுத்தேர்தலில் நாட்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தேர்தல் வாக்குறுதியாக பல்வேறு திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு விலையில்லா அரசி, விலையில்லா கறவைப்பசு, ஆடுகள், சமூகநலத்துறையின் மூலம் ஏழை பெண்களின் திருமணத்திற்கு பட்டயப்படிப்பு படித்த பெண்களுக்கு 4 கிராம் தங்கம் மற்றும் ரூ.50,000 காசோலை, பட்டயப்படிப்பு

அல்லாத பெண்களுக்கு 4 கிராம் தங்கம் மற்றும் ரூ.25,000 காசோலை, முதலமைச்சரின் மருத்துவக்காப்பீட்டுத் திட்டம், அரசு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி, விலையில்லா மிதிவண்டி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தியுள்ளார்கள். இந்த திட்டங்கள் அனைத்தும் கடைகோடி கிராமத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கும் அரசின் திட்டங்கள் விரைவாக சென்றடைந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் நிறைவேற்றிய திட்டங்கள் தொடர்ந்து நாட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக 2016 சட்டமன்ற பொதுத் தேர்தலில் 6வது முறையாக தமிழக முதலமைச்சராக அம்மா அவர்களை நாட்டு மக்கள் வெற்றிபெற செய்துள்ளனர்.

2016 சட்டமன்ற பொதுத் தேர்தலில் தேர்தல் வாக்குறுதியாக அனைத்து வீடுகளுக்கு 100 யூனிட் வரை இலவச மின்சாரம், சிறு குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக் கடன் தள்ளுபடி, திருமண நிதி உதவித் திட்டங்களின் கீழ், திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்வு, கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 200 யூனிட்டுகளாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரம் 750 யூனிட்டுகளாகவும் உயர்வு, டாஸ்மாக் மூலம் நடத்தப்படும் மதுபானக் கடைகள் திறந்திருக்கும் நேரத்தைக் குறைத்ததுடன், 500 கடைகளை மூடவும் ஆணை ஆகியவற்றை 6வது முறையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் பதவியேற்ற முதல் நாளிலேயே 5 திட்டங்களுக்கு கையொப்பமிட்டுள்ளார்கள். கடந்த 5 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் தொடர்ந்து நாட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்பதற்காக 2016 சட்டமன்ற பொதுத் தேர்தலில் 32 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தொடர்ந்து 2வது முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவிக்கின்ற திட்டங்கள் அனைத்தும் விரைவாக மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைய தினம் கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை, சின்னசேலம் ஆகிய வட்டங்களைச் சேர்ந்த 1,652 பயனாளிகளுக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இதில், பட்டா மாறுதல், முதியோர் உதவித்தொகை, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இயற்கை மரண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை போன்ற பல்வேறு திட்டங்கள் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மணிமுக்தா அணையில் ரூ.71 கோடி மதிப்பீட்டில் புதிய 3 மதகுகள் கட்ட இன்று பூமி

பூஜை செய்து தொடங்கப்பட்டுள்ளது. 4,500 ஏக்கர் விவசாய நிலங்கள் இதன் மூலம் பயன்பெற உள்ளது.

திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தில் வழங்கப்பட்ட 4 கிராம் தங்கத்தினை உயர்த்தி, 8 கிராம் தங்கம் வழங்கவும், மின்சாரத்துறையின் மூலம் 100 யூனிட் மின்சாரம் ஒவ்வொரு வீடுகளுக்கும் இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்த தேர்தல் வாக்குறுதியினை, நடைமுறைப்படுத்தப்படுமா என்று எதிர்கட்சிகள் கேள்வி எழுப்பினர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், 100 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கியுள்ளார்கள். கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் மின்சாரத்துறையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அதிக கவனம் செலுத்தி, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தியுள்ளார்கள். எனவே, தமிழகத்தில் தேவையை விட மின்சார உற்பத்தி அதிகரிக்கப்பட்டு, 3,000 மெகாவாட் மின்சாரம் வெளி மாநிலங்களுக்கு விற்கவும் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். தமிழகம் மின் மிகை மாநிலமாக திகழ்கிறது. மேலும், மின்சார கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 5000 டாஸ்மாக் மதுக்கடைகள் மூடப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளில் படிப்படியாக முற்றிலுமாக மதுக்கடைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மக்களைத்தேடி அரசு என்ற நிலையில் அரசின் திட்டங்கள் வந்தடைகிறது. இதுபோன்ற திட்டங்கள் தொடர்ந்து கிடைத்திட மக்கள் என்றென்றும் இந்த அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இவ்விழாவில், பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர்.க.காமராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இரா.குமரகுரு, திரு.அ.பிரபு, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜசேகரன், முன்னாள் அமைச்சர் திரு.ப.மோகன், நகரமன்றத் தலைவர் திரு.ஜி.பாலகிருஷ்ணன், ஒன்றியக்குழு தலைவர்கள் திரு.ஏ.எஸ்.ஏ.ராஜசேகர், திரு.பி.ராஜேந்திரன், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணைய தலைவர் திரு.கே.ஜி.பி.ஞானமூர்த்தி, கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தலைவர் திரு.கதிர்தண்டபானி, வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.சண்முகநாதன், திருமதி.செந்தாமரை மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.